**Dhina Thanthi, Coimbatore, Aug 28 2012**



கோவை ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கில் நடந்த வினாடி-வினா போட்டியில் முதலிடத்தை பெற்ற ஜி.கே.டி பள்ளி மாணவர்கள் ஆதித்யன், ஆண்ட்ரோ பெலிக்ஸ் சோட்விக் ஆகியோருக்கு கலெக்டர் எம்.கருணாகரன் பரிசு வழங்கிய போது எடுத்தபடம்.

**டாடா கன்சல்டன்சி சர்விசஸ் சார்பில்**

# பள்ளி மாணவர்களுக்கு வினாடி-வினா போட்டி

கோவை, ஆக.28-

டாடா கன்சல்டன்சி சர்விசஸ் (டி.சி.எஸ்.) சார்பில் பள்ளி மாணவர்களுக்கு இடையே வினாடி-வினா போட்டி கோவை ஆர்.எஸ்.புரத்தில் உள்ள மாநகராட்சி கலையரங்கில் நடைபெற்றது. இதில் குன்னூர், காங்கயம், கோத்தகிரி, ஊட்டி, சேலம், பொள்ளாச்சி, பாலக்காடு, உடுமலை பகுதியை சேர்ந்த பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மொத்தம் 102 பள்ளிகளை சேர்ந்த 1,208 மாணவர்கள் பங்கேற்றனர். இதில் இறுதி சுற்றுக்கு கோவை அங்கப்பா மேல்நிலைப்பள்ளி, கருணா பிப் பள்ளி, யுவபாரதி பப்ளிக் பள்ளி, கோத்தகிரி புனித ஜூட்ஸ் பப்ளிக் பள்ளி, ஜி.கே.டி. மெட்ரிக் பள்ளி, எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிக் பள்ளியை சேர்ந்த மாணவர்கள் தகுதி பெற்றனர்.

போட்டியில் 45 மதிப்பெண் பெற்று கோவை ஜி.கே.டி.மெட்ரிக் பள்ளி மாணவர்கள் ஆதித்தியன், ஆண்ட்ரோ பெலிக்ஸ் சோட்விக் ஆகியோர் முதலிடத்தையும், 40 மதிப்பெண் எடுத்து யுவபாரதி பப்ளிக் ஸ்கூல் பள்ளி மாணவர்கள் அதிசயகிரண், ரியாடேனியல் ஆகியோர் 2-வது இடத்தையும் பெற்றனர். அவர்களுக்கு கலெக்டர் கருணாகரன் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

இதில் டி.சி.எஸ். மனிதவள பிரிவு துணைத்தலைவர் கே.கணேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.